**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.MCOP. 82/2019**

**Deposition of P .W.1- விஜயக்குமார்**

**Dated:** 18.07.2025

**<u>3வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்து 2003ம் ஆண்டு நடைபெற்றது. வழக்கை 2019ல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சூழ்நிலைகள் மோசமாக இருந்ததால் உரிய காலத்தில் தாக்கல் செய்யவில்லை. TN 74 C 3628 இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றேன். விபத்து சமயம் எனக்கு ஒட்டுனர் உரிமம் உண்டு. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வாகனத்திற்கு காப்பீடு உண்டு ஆனால், அதையும் தாக்கல் செய்யவில்லை. எனக்கு ஓட்டுனர் உரிமமோ, காப்பீடோ, சாலையில் ஓட்டுவதற்கு அனுமதியோ கிடையாது என்றால் சரியல்ல. எனது வாகனம் சாலையில் ஓட தகுதி இல்லாத வாகனம் என்று சொன்னால் சரியல்ல. விபத்து கருப்புகோடு சந்திப்பை தாண்டிய உடன் ஏற்பட்டது. நான் முன்னால் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்று கொண்டிருந்தேன். எனக்கு முன்னால் என்ன வாகனம் சென்றது என்று எனக்குத் தெரியாது. எனக்கு முன்னால் சென்ற வாகனத்தை நான் முந்தி சென்று கேரளா அரசு பேரூந்தில் மோதினேன் என்றால் சரியல்ல. கேரளா பேரூந்தில் இடித்து சாலையில் விழுந்தேன் என்று சொன்னால் சரியல்ல. காவல்நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. மருத்துவமனையில் வைத்து புகார் வாங்கினார்கள். TN 74 Y 2611 Tractor மற்றும் trialer இடித்தது. நான் மனுவில் கூறியுள்ளது போல் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. சாதாரணமாக Tractor –ஐ trialer உடன் சேர்த்து வேகமாக ஓட்ட முடியாது என்றால் சரியல்ல. நான் வேகமாக ஓட்டி சென்று கேரளா பேரூந்தில் மோதி விட்டு பொய் வழக்கு

கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேரளா பேரூந்தின் மீது மோதி சாலையில் கிடந்ததை பார்த்து 1வது எதிர்மனுதாரர் மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தார் என்றால் சரியல்ல. கேரளா பேரூந்தை கட்சி சேர்த்து அவர்கள் மீது தான் பரிகாரம் கேட்க முடியும் என்றால் சரியல்ல. சரியான தரப்பினர்களை கட்சி சேர்க்காததால் எனது மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மருத்துவ ரசீதுகள் 2003ல் வழங்கப்பட்டவை. மருத்துவ பரிந்துரை சீட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மருத்துவர் மூலமாக மருத்துவ ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை. trialer–ல் பயணிகளை ஏற்றி சென்றதால் 3வது எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு கொடுக்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயம் மெக்கானிக்காக வேலை பார்த்தேன். தனியாக நிறுவனம் நடத்தி வந்ததை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை. விபத்து எனது கவனக்குறைவால் ஏற்பட்டதால் 3வது எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடு தொகையும் கொடுக்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. 3வது எதிர்மனுதாரரை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.